O.S. 60/2018

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:19.10.2024

PW1:செல்வராஜ் த/பெ– கோவிந்தராஜ்

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

தபசில் சொத்து ஆதியில் ரெங்கசாமி நாயக்கருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ரெங்கசாமி நாயக்கர், சீனிவாசகன், வெங்கிடசாமி, கோபால் சாமி ஆகிய நால்வரும் அவர்களுக்குள் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரம் வா.சா.ஆ.1 என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள 4 லக்க சொத்து கோபால்சாமி நாயக்கருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். பிராது தபசில் 3 வது இலக்க சொத்து ஆரம்பத்தில் கோபால்சாமி பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். கோபால்சாமி நாயக்கர் அவருக்கு கிடைத்த சொத்துக்களை பாப்பநாயக்கர் என்பவருக்கு கிரையம் கொடுத்ததாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ல் வழக்கு தபசில் சொத்துக்கள் இல்லை என்றால் சரிதான். தபசில் 3 வது இலக்க சொத்து வெங்கிடசாமிக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் வெங்கிடசாமி நாயக்கர் சீனிவாசக நாயக்கரிடம் இருந்து பெற்றுக்கொண்டார். பாப்பநாயக்கரும்,வெங்கிடசாமி நாயக்கரும் வாய்மொழி பாகபிரிவினை செய்ததின் பேரில் அந்த சொத்து வெங்கிடசாமிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வெங்கிடசாமி நாயக்கரும், பாப்பநாயக்கரும் உடன் பிறந்தவர்கள் இல்லை என்றால் சரிதான். பாப்பநாயக்கரிடம் இருந்து வெங்கிடசாமி நாயக்கருக்கு அந்த

சொத்து எவ்வாறு வந்தது என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தபசில் 1, 2 வது அயிட்ட சொத்துக்கள் சீனிவாசகனிடம் இருந்து வெங்கிடசாமி நாயக்கர் கிரையம் பெற்றதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. வெங்கிடசாமி நாயக்கர் பெயரில் பட்டா இருந்தற்கான ஆவணம் தாக்கல்செய்துள்ளேனா என்றால் பட்டா உள்ளது, ஆனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.4ன் அசல் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கோபால்சாமிக்கு பிரதிவாதி மகன். வா.சா.ஆ.4ன் தனது மகன் ரெங்கராமானுஜத்திற்கு கோபால்சாமி கார்டியனாக கையொப்பம் உள்ளது என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தில் பிரதிவாதி மைனர் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 கிரைய ஆவணம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரிதான். வெங்கிடசாமிக்கு சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்பதற்கான முந்தைய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வெங்கிடசாமி இறந்து சுமார் 50 வருடங்கள் ஆகிவிட்டது. அவருடைய வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல்செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் வெங்கிடசாமி நாயக்கருக்கு கோவிந்தராஜ், ரெங்கசாமி, அப்பன் ராமானுஜம், வரதராஜ் ஆகியோர்கள் வாரிசுகள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வெங்கிடசாமி நாயக்கருக்கு பெண் குழந்தை உள்ளார். அந்த பெண் குழந்தையை நான் தாக்கல் செய்துள்ள கிரைய ஆவணங்களில் காட்டவில்லை என்றால் சரிதான். 1969ல் வெங்கிடசாமி நாயக்கரின் வாரிசுகள் பாகம் பிரிவினை செய்து கொண்டார்கள் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். 3வது அயிட்ட சொத்து ரங்கசாமி நாயக்கருக்கு ஒதுக்கப்பட்டது என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. கோவிந்தராஜ், ரங்கசாமி ஆகியோர்களுக்கு திருமணம்

நடைபெறவில்லை என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வெங்கிடசாமி மகன் கோவிந்த ராஜ் 22.09.2014 ல் ஒரு உயில் எழுதியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த உயிலை ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 01.11.1994 ல் கோவிந்தராஜ் இறந்துவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கோவிந்தராஜ் என்பவர் எந்த உயிலையும் எழுதவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. இல்லாத உயில் மூலம் ரங்கசாமிக்கு தபசில் சொத்து கிடைத்தது என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. 21.02.1995 ல் ரங்கசாமி அவரது அண்ணன் மகன் சீனிவாசகனுக்கு ஒரு உயில் எழுதி வைத்துள்ளதாக சொல்லியுள்ளேன், ஆனால் அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதனால் உயில்படி சீனிவாசகனுக்கு தபசில் சொத்து கிடைத்தது பொய் என்று சொன்னால் சரியல்ல. சீனிவாசகன் பெயரில் தபசில் சொத்திற்கான பட்டா இல்லை என்றால் சரிதான். பிராதில் தபசில் சொத்தில் சீனிவாசகனுக்கு அரை பாகமும், ஜெயராஜ் என்பவருக்கு கால் பாகமும், வரதராஜனுக்கு கால் பாகமும் பாத்தியம் என்பதற்ககான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆவணங்கள் உள்ளது. 11.03.1999 ல் தபசில் சொத்தின் ஒரு பகுதியை வா.சா.ஆ.5 ன் மூலம் ஜனகராஜ், வரதராஜ் ஆகியோரிடம் என் சகோதரர் ¼ பாகத்தினை கிரையம் பெற்றுள்ளதாக சொல்லியுள்ளேன். வா.சா.ஆ.5 ல் அதை கிரையம் செய்த நபர்களுக்கு எப்படி பாத்தியம் என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த கிரையம் செய்த நபர்களுக்கு அந்த சொத்து பாத்தியம் இல்லாததால் வா.சா.ஆ.5 ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 ல் சீனிவாசகன் தனக்கு 21.02.1995 ன் உயில் மூலம் பாத்தியம் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். 23.02.2009 ம் தேதியிட்ட நான்

கிரைய பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. நான் வாங்கிய வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.7 கிரைய பத்திரங்கள் அனைத்தும் மோசடியாக பெறப்பட்டவை என்றால் சரியல்ல. அதில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியின் தகப்பனார் 1936 ல் அவரது பாகத்தினை விற்றுவிட்டார் என்றும், 1951 ல் கிரையம் பதிவு செய்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றும் சொன்னால் 1936 ல் ரங்கசாமி மைனராக இருந்ததால் அந்த கிரையம் செல்லாது என்று 1951 ல் கிரையம் செய்துள்ளார்கள். வருவாய் துறை ஆவணங்களில் 1984 ல் இருந்து பிரதிவாதியின் பெயரில் தான் சொத்துக்கள் உள்ளது என்று உள்ளது என்று சொன்னால் சரிதான், பட்டா மட்டும் அவரது பெயரில உள்ளது, அனுபவம் எங்களிடம் உள்ளது. எங்கள் அனுபவத்தில் உள்ளதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பட்டா பிரதிவாதியின் பெயரில் உள்ளது என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தபசில் சொத்துக்கள் அனைத்தும் பிரதிவாதியின் அனுபவத்தில் தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 ல் 3 அயிட்ட சொத்து 3 செண்ட் என்று சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. பிரதிவாதியின் தகப்பனார் பாப்பநாயக்கருக்கோ, வெங்கிடசாமிக்கோ விற்கவில்லை என்றால் சரியல்ல. 1933 ல் தபசில்சொத்துக்களை பிரதிவாதி வங்கியில் அடமானம் வைத்து கடன் பெற்று கடனை செலுத்தி சொத்துக்களை மீட்டுள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2, 3 வாங்கிய நபர்களுக்கு சொத்துக்கள் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. அந்த கிரையங்கள் செல்லாது என்றால் சரியல்ல. தபசில் சொத்துக்கள் குறித்து எனக்கு பட்டா வழங்கப்பட்டதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். தபசில் சொத்துக்களில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், நான் கோரியுள்ள பரிகாரம்

**கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.**